# தாம்பரம் மாநகராட்சி (மண்டலம்–II)
# சென்னை – 600 044

மண்டல கூட்ட எண். 12/2024–25 நாள். 16.08.2024

## அவசரக் கூட்ட அழைப்பு

தாம்பரம் மாநகராட்சி, மண்டலம்–II-ன் மண்டலக்குழுவின் அவசரக் கூட்டம் மண்டலம்–II (பல்லவபுரம்) கூட்ட அரங்கில் 19.08.2024–ம் திங்கட்கிழமை காலை 10.45 மணி அளவில் நடைபெறும். இக்கூட்டத்தில் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பொருள்கள் குறித்து விவாதித்து முடிவெடுக்க உள்ளதால் மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மண்டல குழுத்தலைவர்,
தாம்பரம் மாநகராட்சி, மண்டலம்–II

இணைப்பு –
மண்டல கூட்டப் பொருள்கள்.

பெறுநர் –
திரு / திருமதி .............................................................................. அவர்கள்,
மா மன்ற உறுப்பினர் (வார்டு– )
தாம்பரம் மாநகராட்சி.

பொருள் எண். – 1

தாம்பரம் மாநகராட்சி மண்டலம்–IIல் வார்டு எண்.19ல் காசி விசாலாட்சிபுரம் மற்றும் வார்டு எண்.17, சுபம் நகர் பாகம்–1 மற்றும் பாகம்–2 களில் மக்கும் குப்பை சேகரம் செய்து நான்கு OCC நுண்ணுயிர் மையத்தில் உரமாக்கும் பணி செயல்பட்டு வந்தது. அந்த நான்கு OCC மையங்கள் தற்போது மோசமாக உடைந்து சேதரமைடைந்து, உபயோகமற்ற நிலையில் உள்ளதாலும், மேலும் தாம்பரம் மாநகராட்சிக்கு மிக அருகில் உள்ள திரிசூலம் ஊராட்சி பகுதிகளில் இருந்து மாமிச கழிவுகள், குப்பைகளை இரவு நேரங்களில் நான்கு OCC மையத்தின் அருகில் கொட்டி, துர்நாற்றம் ஏற்படுத்தி வருகின்றனர், எனவே இந்த நான்கு OCC நுண்ணுயிர் மையத்தினை பொறியியல் பிரிவு மூலம் அப்புறப்படுத்தி நடவடிக்கை மேற்கொள்ள மண்டலக்குழுவின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:–

1. அனுமதி வழங்கலாம்.
2. அதற்கான செலவினம் வருவாய் நிதியில் மேற்கொள்ளலாம்.

ந.க.எண் : 3333/2024/எச்1

19/8/2

மண்டல குழுத்தலைவர்,
தாம்பரம் மாநகராட்சி (மண்டலம்–II).